பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 19 | புதன்கிழமை | 02.04.2025 | அதிர்வு 240

## சாமர சம்பத் எம்.பிக்கு விளக்கமறியல் நீடிப்பு



ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்ட புதிய ஜன நாயக 06

# இனப்படுகொலையாளிகளை பாதுகாக்கின்றது இந்த அரசு!

## பிரச்சாரக் கூட்டத்தில் சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு தமிழினம் விழ விழ மீண்டெழும் என்றும் சூளுரை

(எஸ்.நிதர்ஷன்)

"கடந்த கால ஆட்சியாளர்களின் இனப்படுகொலை உள்ளிட்ட விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்காமல் அவர்களைப் பாதுகாக்கின்ற செயற்பாட்டையே தேசிய மக்கள் சக்தி அரசு முன்னெடுக்கின்றது."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டினார். 06



# தேர்தல் வெற்றிக்காக வடக்கு, கிழக்கு மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கிய அநுர அரசு



## மொட்டுக் கட்சி எம்.பி. நாமல் சாடல்

"நாங்கள் தேர்தல் வெற்றிக்காக வடக்குக்கு ஒன்றும் தெற்குக்குப் பிறிதொன்றும் குறிப்பிடவில்லை. ஆனால், தேசிய மக்கள் சக்தி தேர்தல் வெற்றிக்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்குப் போலியான வாக்குறுதிகளை வழங்கியது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு இந்த வாரம் முதல் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுவோம். 06

# வியாழேந்திரனுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

இலஞ்சம் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனை எதிர்வரும் 8ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் 06






உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னும் ஐந்து வாரங்கள் கூட இல்லை. அதற்கிடையில் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் உயர்நீதிமன்றத்திற்கும் மேன் முறையிட்டு நீதிமன்றத்திற்கும் படையெடுத்து இருக்கின்றன.

இந்த நீதிமன்றத் தீர்ப்புக்களை எதிர்பார்த்து பிரசாரக் களத்தில் குதிப்பதற்கு பல நூற்றுக் கணக்கில் வேட்பாளர்கள் காத்திருக்கிறார்கள். என்ன நடக்கப் போகின்றது என்பதுதான் கேள்வி.

நேற்று உயர் நீதிமன்றத்தில் தென்னிலங்கையில் தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட மூன்று வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வதற்கான இணக்கத்தைத் தேர்தல் ஆணையம் சட்டமா அதிபர் ஊடாக தெரிவித்திருப்பதை அடுத்து, அந்த மூன்று வேட்பு மனுக்களும் தேர்தலுக்கு உள்வாங்கப்படுகின்றன.

உயர் நீதிமன்றத்தில் மிகுதியாக உள்ள நாற்பதுக்கும் அதிகமான வேட்பு மனுக்கள் தொடர்பான ரிட் மனுக்களின் விடயத்தில் 06









# போரால் வடக்கு பெரும் பாதிப்பு

## கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று உலக வங்கியின் நிபுணத்துவக் குழுவுடனான சந்திப்பில் ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

வடக்கு மாகாணத்தின் ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்கு உலக வங்கி உதவும் முகமாக கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளமைக்கு உலக வங்கியின் நிபுணத்துவக் குழுவுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நன்றி தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் நிபுணத்துவக் குழுவுக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

போரால் வடக்கு மாகாணம் கடந்த 3 தசாப்தங்களாகப் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஆளுநர், கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தொழிற்சாலைகள் வடக்கில் மூடப்பட்டுள்ளதால் இளையோர் வேலைவாய்ப்புக்களை இழந்துள்ளனர் எனத் தெரிவித்த ஆளுநர், விவசாயம் மற்றும் மீன்பிடி வடக்கின் முக்கிய துறைகளாகவுள்ள நிலையில் உற்பத்திப் பொருட்களைப் பெறுமதி சேர் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் அதிகளவானோருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளின் உற்பத்திப்பொட்களுக்கு நிலையான விலை கிடைக்காமையால் அவர்கள் விவசாயத்தை கைவிடும் நிலைமை காணப்படுவதாகவும் குறிப்பிட்ட ஆளுநர், கடந்த காலங்களில் சில குளங்கள் ஊடாக ஏற்று நீர்ப்பாசனம் செய்யப்பட்டு வந்தது என்றும், அது தற்போது இல்லாது போயுள்ளமையால் குறிப்பிட்ட சில பயிர்களை விவசாயிகள் மேற்கொள்ள முடியாத நிலைமை இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

இதன் பின்னர் தமது திட்டம் தொடர்பில் உலக வங்கியின் நிபுணத்துவக் குழுவினர் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைவாக உலக வங்கி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்கு உதவுவதற்கு திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர். 2026 – 2034 ஆம் ஆண்டு வரையிலான 8 ஆண்டுகளுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் திட்டங்கள் மூன்று கட்டங்களாக முன்னெடுக்க திட்டமிடப்படுவதாகத் தெரியப்படுத்தினர்.


உலக வங்கி உட்கட்டுமானத்துக்கான முக்கியத்துவத்தைவிட ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்கே முக்கியத்துவம் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டதுடன் சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளதாகவும் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

அதேநேரம், நெடுந்தீவுக்கு தமது குழுவினர் நேரடியாகச் சென்றனர் என்றும், இதன்போது சுற்றுலாத்துறைக்கான அதிகளவான வாய்ப்புக்கள் அங்கு இருந்தபோதும் போக்குவரத்து சவாலாக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.


உலக வங்கி நிபுணத்துவக் குழுவினரின் அவதானிப்புக்களுடன் உடன்படுவதாகக் தெரிவித்த ஆளுநர், பிரதான வீதிகள் கடந்த காலங்களில் புனரமைக்கப்பட்டதாகவும் விவசாய வீதிகளும், உள்ளூர் இணைப்பு வீதிகளும் புனரமைக்கப்படவில்லை எனவும், இதனால் சுற்றுலாத்துறை, விவசாயம் உள்ளிட்ட துறைகள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாகவும் ஆளுநர் கவலைவெளியிட்டார்.

தமது அவதானிப்புக்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் அடிப்படையில் கொழும்பில் அடுத்த வாரம் அளவில் இறுதிக்கட்டக் கலந்துரையாடல் தேசிய திட்டமிடல் அலுவலகத்துடன் இடம்பெறும் என்றும் உலக வங்கியின் நிபுணத்துவக் குழுவினர் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநருடன், ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் குரூஸ் ஆகியோர் பங்கேற்றனர்.







# 6 மாதங்களாகக் கோமாவில் இருந்த பிரதேச செயலர் ஒருவர் உயிரிழப்பு

விபத்தில் சிக்கி கோமா நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 6 மாதங்களாக சிகிச்சை பெற்று வந்த பிரதேச செயலர் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

மடு – கற்கிரந்தகுளம் பகுதியைச் சேர்ந்த சகாயராஜா யேசுதாஸ் பெரேரா (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் அநுராதபுரம் வீதியில், மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது நடந்து சென்றவர் மீது மோதினார். இதன்போது நடந்து சென்ற நபர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பிய நிலையில் மேற்படி நபர் கோமா நிலைக்குச் சென்றார்.

அவர் பின்னர் மதவாச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு 2 மாதங்கள் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்தார். அதன்பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு 4 மாதங்கள் கோமா நிலையில் அங்கு சிகிச்சை பெற்றார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார்.

# வாகன பதிவின்போது உரிமையாளர்களின் TIN இலக்கத்தை சமர்ப்பிப்பது கட்டாயம்




புதிய வாகனங்களை பதிவு செய்யும் போது உரிமையா ளர்களின் வுஜே இலக்கத்தை சமர்ப்பிப்பது கட்டாயமாக் கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம் மற்றும் ஆட் டோ தவிர்ந்த ஏனைய அனைத்து புதிய மோட்டார் வாகனங் களுக்கும் இது பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வருமான வரி செலுத்துவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வருமான வரி துறையினரால் வழங்கப்பட்ட TIN இலக்கத்தையும் அதனை உறுதிப்படுத்தும் முறை யான சத்தியக்கடதாசியை சம்பந்தப்பட்ட உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டும் என மோட்டார் வாகன போக்கு வரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இரவு நேர களியாட்ட விடுதி மோதல்:

# யோஷிதவுடன் சென்ற நால்வருக்குப் பிணை!

கொழும்பு, யூனியன் பிளேசில் உள்ள இரவு நேர களியாட்ட விடுதிக்கு வெளியே கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி ஏற்பட்ட மோதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களையும் பிணையில் விடுதலை செய்ய கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கொழும்பு, யூனியன் பிளேசில் உள்ள இரவு நேர களியாட்ட விடுதிக்குக் கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி இரவு யோஷ த ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவியுடன் குழுவொன்று சென்றுள்ளது.

இதன்போது, இரவு நேர களியாட்ட விடுதிக்கு வெளியில் யோஷித ராஜபக்ஷவுடன் சென்ற குழுவுக்கும் களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

மோதலின் போது யோஷித ராஜபக்ஷவுடன் சென்ற குழுவினர் களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத் தர்களை தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்த னர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி ஆகியோர் கொம்பனி வீதி பொலிஸாரிடம் 3 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

இந்த மோதலுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் மத்திய கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி சரணடைந்ததையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேல திக விசாரணைகளில், இந்தச் சம்பவத்துடன் தொடர் புடைய மற்றுமொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட் டார்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# நெடுந்தீவில் ஐயனார் ஆலயத்தில் சமய வழிபாட்டுடன் பிரசாரத்தை ஆரம்பித்தது இலங்கைத் தமிழரசுக் கட்சி

நெடுந்தீவு பிரதேச சபைக்கான தேர்தல் பரப்புரைகளை நெடுந்தீவு ஐயனார் ஆலயத்தில் சமய வழிபாட்டுடன் ஆரம்பித்தது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

நெடுந்தீவு ஜே /O1 கிராமிய சேவையாளர் பிரிவில் முதலாம் வட்டாரத்தில் இப்பரப்புரை பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

நெடுந்தீவு ஐயனார் ஆலயத்தில் நேற்றுக் காலை விசேட வழிபாடுகளுடன் நெடுந்தீவு பிரதேச சபைக்கான தேர்தல் பரப்புரை பணிகளை நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபையில் உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலில் போட்டியிடும் இலங்கை தமிழரசு கட்சியின் வேட்பாளர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்னர்

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறுதரன் கருத்து தெரிவிக்கையில் –

கடந்த காலத்தில் நெடுந்தீவு பிரதேச சபையில் உள்ளூராட்சி சபையை ஆண்ட கட்சிகள் மக்களுக்கான சேவைகளைச் சரிவரச் செய்யவில்லை கட்சிகளுக்கு இடையே இருந்த பிளவுகள் இந்த சபையை நாம் இழக்க காரணமாகக் கடந்த காலத்தில் இருந்தன.

இம்முறை நடைபெறும் பிரதேச சபை தேர்தலில் மக்கள் நெடுந்தீவின் அபிவிருத்தி மற்றும் மக்கள் பணிகளுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கின்றேன். – என்றார்.

















# ஹைலன்ட் யோகட், பசும்பால் நேற்று முதல் விலைகள் குறைப்பு

ஹைலன்ட் யோகட் மற்றும் பசும்பால் விலை நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளது.

யோகட் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 70 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

450 மில்லிலீற்றர் பசும்பால் பெக்கட்டின் விலை 25 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 200 ரூபாவாகும்.

900 மில்லிலீற்றர் பசும்பால் பெக்கட் விலை 60 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 380 ரூபாவாகும்.

450 மில்லி லீற்றர் பசும்பால் பெக்கட் விலை 30 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது

# தொழில் முயற்சியாளர்களை அரசாங்கம் ஏமாற்றியுள்ளது

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு




முன்னைய அரசாங்கத்தை போலவே தற்போதைய அரசாங்கமும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஏமாற்றியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர்களுடன் ஹொரணையில் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பெரும் பங்களிப்பை வழங்குகிறார்கள்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவீதத்துக்கும் அதிகமான பங்களிப்பையும் இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளையும் வழங்குகிறார்கள்.

ஏப்ரல் 21 தாக்குதல், கொரோனா மற்றும் வங்குரோத்து நிலைமை காரணமாக இவர்களது பொருளாதாரம் பாதிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் பராட்டே சட்டத்தின் காரணமாக சொத்துக்கள் மற்றும் காணிகள் இஷ்டத்திற்கு ஏலம் விடப்பட்டு வந்தன.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக குரல் எழுப்பி பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தினேன்.

எனினும், இந்த அரசாங்கம் மார்ச் 31ஆம் திகதி வரை பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்திய போதிலும், அது இன்று முதல் மீண்டும் அமுலாகிறது.

இந்த கைத்தொழில் துறையினருக்கு மாற்று தீர்வுகள், வட்டி நிவாரணம் மற்றும் கடன் குறைப்பு என்பவற்றை வழங்கி, நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

கடந்த அரசாங்கமும் இந்த அரசாங்கமும் தற்காலிக தீர்வுகளை மட்டுமே வழங்கியதே தவிர நிலையான நிரந்தரத் தீர்வுகளை வழங்கவில்லை.” என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்காடி விவகாரத்தை முடிக்கவே தேர்தல் ஆணையம் தீர்மானித்து இருப்பதாக தெரிகிறது. அவை தொடர்பில் இனி தரப்புகளிடையே இணக்கமான உடன்பாட்டுக்கு வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது.

சரி, இந்த நாற்பதுக்கும் அதிகமான ரிட் மனுக்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் இப்போதைக்கு என்ன முடிவு எட்டப்படலாம்?

எது, எப்படியாயினும் நாளை மறுதினம் நாலாம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நீதிமன்றங்களுக்கு புது வருட காலத்தையொட்டிய விடுமுறை. அதற்கு முன்னர் இந்த வேட்பு மனுக்களின் சர்ச்சை தொடர்பாக ஒரு முடிவு எடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

இரண்டு விதமான முடிவுகளுக்கு வாய்ப்பு இருப்பதாக சட்டவட்டாரங்கள் சுட்டுகின்றன.

ஒன்று - இந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபிக்கும் ரிட் மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரித்துவிட்டு, அவற்றை நிராகரித்து தீர்ப்பளிக்கலாம். பெரும்பாலும் அதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என அவதானிகள் கூறுகின்றனர். ஆயினும் அதை நேரத்துடன் நாம் தீர்மானிக்க முடியாது.

அடுத்தது - வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிரான ரிட் மனுக்களில் சிலவற்றில் நியாயமான அடிப்படை விடயங்கள் இருப்பதாக உயர் நீதிமன்றம் கருதினால் அந்த மனுக்கள் தொடர்பில் விசாரணையைத் தொடர்ந்து நடத்துவதற்காக அம்மனுக்களை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்கலாம். அப்படி ஏற்றாலும் மே 6ஆம் திகதி வாக்களிப்பு தினத்துக்கு முன்னர் விசாரணைக்கு ஏற்ற அந்த ரிட் மனுக்கள் தொடர்பில் ஒரு முடிவை உயர் நீதிமன்றம் எட்ட முடியாது. அதற்குப் போதிய கால அவகாசம் இருக்காது. அத்தகைய சூழ்நிலையில் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ள ரிட் மனுக்கள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை தள்ளி வைக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிடலாம்.

2023 ஆரம்பத்திலும் ஒரு தடவை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. தேர்தல் நடைபெறாத போதிலும், அந்த வேட்பு மனு ஏற்றலின் போது சில வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமையும், அந்த மனுக்களில் சிலவற்றை விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்த உயர்நீதிமன்றம், அவை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு உரிய தேர்தல்களை நடத்துவதற்கு இடைக்காலத் தடை விதித்திருந்தமையும் நினைவு கூரத்தக்கது.

இப்போதும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுக்களில் எவற்றையாவது உயர் நீதிமன்றம் தொடர் விசாரணைக்கு ஏற்குமாயின், அந்த ரிட் மனு தொடர்பான உள்ளூராட்சி சபையின் தேர்தலை நடத்துவதற்கு நீதி மன்றம் இடைக்காலத் தடை விதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும் இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுக்களில் பலவற்றுக்கு அத்தகைய உத்தரவை உயர்நீதிமன்றம் விதிக்க வாய்ப்பில்லை என்பதே சட்ட அவதானிகளின் கருத்தாக உள்ளது.

## சாமர சம்பத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னணி கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராகக் கடமையாற்றியபோது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவைக் காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட 3 ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்

இதனையடுத்து, சாமர சம்பத் தசநாயக்க நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ஒரு ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 5 மில்லியன் ரூபா இரண்டு சரீர பிணைகளில் விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனைய இரு ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதிவாதிகளின் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் தேர்தல் பிரச்சார மேடைகளில் பேசுவதை அனைவரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் பொய் சொல்வதும் ஜனநாயகம் என்று குறிப்பிட்டுக் கொண்டு சேறு பூசுவதையும் அனைவரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் அரசியல்வாதிகள் மீதான வெறுப்பு மற்றும் பொய் ஆகியன மாத்திரமே வலுப்பெற்றிருந்தன.போலியான வாக்குறுதிகள் மீது நம்பிக்கை கொண்டு நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்கினார்கள்.

நாங்கள் தேர்தல் வெற்றிக்காக வடக்குக்கு ஒன்றும், தெற்குக்குப் பிறிதொன்றும் நாங்கள் குறிப்பிடவில்லை. தோல்வியடைவோம் என்று தெரிந்தும் பொய்யுரைக்கவில்லை.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அரச சேவையாளர்களுக்குச் சம்பளம் அதிகரிப்பதாக நாங்கள் குறிப்பிடவில்லை. நடைமுறைக்குச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கியிருந்தால் நாங்களும் வெற்றி பெற்றிருப்போம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு இந்த அரசு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது. ஆகவே, வழங்கியுள்ள வாக்குறுதிகளை நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் நிறைவேற்றுவதற்கு அரசு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்." - என்றார்.

## இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். நெடுந்தீவுப் பகுதிக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காகச் சென்றிருந்த சிறீதரன் எம்.பி., மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

"நடைபெறவுள்ள குட்டித் தேர்தலில் குட்டி அரசு அமைப்பதற்கு ஆணையைத் தாருங்கள். அந்த ஆணையைப் பெற்று மீண்டும் நாம் ஆட்சியமைப்போம்.

இந்த நாட்டில் பல்வேறு அரசுகள் ஆட்சிப்பீடத்துக்கு வந்திருந்தாலும் அதில் எந்த அரசும் தமிழ் மக்களுக்கானதாக இருந்ததில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அந்த அரசுகள் எங்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்திருக்கின்றன.

அதே போன்று நாட்டில் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசும் தமிழ் மக்களுக்காக எதனையும் செய்யவில்லை. அதிலும்

மாற்றம் எனக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்துள்ள இந்த அரசிடம் பல்வேறு கேள்விகளும் எதிர்பார்ப்புகளும் எமது மக்களிடத்தே இருக்கின்றன.

குறிப்பாகஎங்களுக்குஎதிராகஇப்போது யுத்தம் நடத்தவில்லை. ஆனால், மிக நூதனமாக இந்த மண்ணில் இருந்து அகற்றப்பட்டு வருகின்றோம்.

உதாரணத்துக்குச் சொல்வதாயின் எங்களுக்கு எதிராக மிகப் பெரிய படுகொலையை மஹிந்த அரசு இந்த மண்ணில் செய்திருந்தது. அதை மூடி மறைக்கும் செயற்பாட்டிலே இந்த அரசும் செயற்படுகின்றது.

குறிப்பாக குற்றம் நடக்கவில்லை என்றும், எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் இவர்கள் சொல்கின்றனர். இதனை எமது மக்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

எமது மக்களுக்கு எதிராகப் படுகொலைகளைச் செய்தார்கள் என்ற குற்றத்துக்காக இலங்கையைச் சேர்ந்த நான்கு பேருக்கு பிரித்தானியா தடை விதித்துள்ளது. அதேபோன்று கனடாவும் எங்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து வருகின்றது.

இப்படி உலகம் எமக்காகச் சிந்தித்துச் செயற்படுகின்ற சூழலில் அந்த உலக நாடுகளுக்கு எதிராகத் தெற்கிலிருந்து பலரும் கொக்கரித்து வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

என்.பி.பி.தான் ஆட்சியை நடத்தி வருகின்றது. அதிலும் என்.பி.பி. இல்லாத தயாசிறி ஜயசேகர மற்றும் விமல் வீரவன்ச போன்றோர் புதுப் புது கதைகளைக் கூறிக் கொண்டு கொக்கரிக்கின்றனர்.

இதனைப் பார்க்கின்றபோது சிங்களவர்கள் தமக்கு ஒரு பிரச்சினை என்று வந்தால் ஒன்றாக உள்ளனர். ஆனால், தமிழ் மக்களாகிய நாங்கள்தான் பிரிந்து நிற்கின்றோம். அப்படியாக எங்களிடத்திலும் ஒற்றுமை அவசியம்.

சர்வதேச நாடுகளின் செயற்பாடுகளைப் பார்க்கின்றபோது உலகத்தின் பூகோள அரசியலில் எங்களுக்கான மாற்றங்களும் மெல்ல மெல்ல நகருகின்றன எனத் தெரிகின்றது.

இந்த வீட்டுச் சின்னம் உங்கள் சின்னம். வீட்டுக்குள் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். குறிப்பாக ஒரு வீட்டில் உள்ள குடும்பத்துக்குள்ளும் அதிலும் அண்ணண், தம்பிகளுக்கு இடையே கூட பிரச்சினைகள் இருக்கலாம்.

07

# உழைக்கும் போது செலுத்தும் வரி எல்லைகளில் திருத்தம்




உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரி எல்லைகள் நேற்று முதல் திருத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய மாதாந்தம் வரி அறவிடப்படாத எல்லை ஒரு லட்சம் ரூபாவில் இருந்து 150,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் மேலும் சில வரிகளிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரி நேற்று முதல் திருத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய இதுவரை வரி விலக்களிக்கப்பட்டிருந்த ஒரு லட்சம் ரூபா என்ற சம்பள எல்லை 150,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 150,000 ரூபாவை மாதாந்த சம்பளமாக பெற்ற ஒருவரிடம் 3500 ரூபா உழைக்கும்போது செலுத்தும் வரியாக அறவிடப்பட்டிருந்தது.

புதிய திருத்தத்திற்கு அமைய அந்த வரி நீக்கப்பட்டுள்ளது.

2 லட்சம் ரூபா சம்பளத்தை பெற்ற ஒருவர் இதுவரை 10,500 ரூபாவை வரியாக செலுத்த வேண்டியிருந்ததுடன் புதிய திருத்தத்திற்கு அமைய அந்த தொகை 3,000 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2 லட்சம் ரூபா சம்பளத்தை பெறும் ஒருவருக்கு 7,500 ரூபா வரி நிவாரணம் கிடைக்கவுள்ளது.

3 லட்சம் ரூபா சம்பளம் பெறும் ஒருவருக்கு 16,500 ரூபா வரி நிவாரணம் கிடைக்கவுள்ளது.

இதேவேளை, வைப்பீட்டாளருக்கு செலுத்த வேண்டிய வட்டி மீதான வரியும் நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 18 வயதுக்கு குறைவானவர்களின் வைப்பீடுகளுக்கான வட்டி மீதான வரி தொடர்பில் நிவாரணத்தை கோர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவெளை, வெளிநாடுகளுக்கு வழங்குகின்ற சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு நேற்று முதல் 15 வீத வரி அறவிடப்படுகிறது.

## இனப்படுகொலை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படியாக வீட்டுக்குள்ளேயே பிரச்சினைகள் இருக்கின்றன போன்று எமது கட்சிக்குள்ளும் பல பிரச்சினைகள் உள்ளன.

இதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. உண்மையில் ஒரு குடும்பத்துக்குள் இருக்கும் பிரச்சினைகள் போன்று எமது கட்சிக்குள்ளும் பிரச்சினைகள் இருக்கத்தான் செயகின்றன.

அப்படியாகப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதற்காக நான் கட்சியை விட்டுவிட்டு ஓடவில்லை. குறிப்பாக எனக்குத் தரப்பட்ட அழுத்தத்தை விட வேறு யாருக்குமே அப்படி அழுத்தம் இருந்திருக்காது.

தமிழினம் அழிக்கப்பட முடியாத ஒரு இனம். நாங்கள் விழ விழ எழுவோம். அப்படியாகத் திரும்பத் திரும்ப எழும்பியிருக்கின்றோம். அது எமது வரலாறாக இருக்கின்றது. அதே போன்றே கடந்த கால தேர்தல்களில் சில தவறுகள் இடம் பெற்றிருந்தாலும் இனிவரும் காலங்களில் அத்தகைய தவறுகளை இழைக்காது செயற்பட வேண்டியது மிக மிக அவசியம்.” - என்றார்.

## வியாழேந்திரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்னும் முடிவடையவில்லை என்று இலஞ்ச, ஊழலை ஆணைக்குழு அதிகாரிகள் அளித்த தகவலை ஏற்றுக் கொண்ட கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியல் ஆதாயம் யாருக்கு?

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முற்படுகின்றது என சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. குற்றஞ்சாட்டியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் ஆறாம் ஆண்டு நினைவுநாள் வரும் ஏப்ரல் 21 ஆம் திகதியாகும். அதற்கு முன்னர் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பின் விவரம் வெளியிடப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையிலேயே நாமல் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் எம்மிடம் வினவியோ அல்லது ஊடகங்கள் முன் வந்து கருத்து வெளியிட்டோ பலன் இல்லை. தற்போதைய ஆட்சியில் பொலிஸில் உயர் பதவியொன்று வழங்கப்பட்டுள்ள நபரே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக இருந்தார். இப்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக உள்ளவரும் அச்சமயம் பாதிகாப்புப் பிரிவில் பிரதானியாக இருந்தார். இவர்கள் இருவரிடமும் வினவலாம். தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் வேட்பாளர் ஒருவரின் மகன்மார் இருவரே தற்கொலை குண்டுதாரிகள். எனவே, ஒரு கட்சியாக இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி எடுத்த நடவடிக்கை என்ன? தமது தரப்பில் தவறு உள்ளதால் சில அதிகாரிகளுக்கு அரசியல் அடைக்கலம் கொடுத்துள்ளனர். கடந்த கால அரசாங்கங்கள் மீது பழிபோட்டுவிட்டு அந்த அதிகாரிகளை அரசாங்கம் பாதுகாக்கின்றது.” - என்றும் நாமல் ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை இப்போதைய அரசு அரசியல் ஆக்குவதாக குற்றம் சுமத்தும் நாமல் ராஜபக்ஷ இந்த தாக்குதல் தொடர்பாக உண்மையில் அரசியல் ஆதாயம் அடைந்தவர்கள் யார் என்பதை ஒரு தடவை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

2015 இல் ராஜபக்ஷக்களை பொது மக்கள் நிராகரித்து, நல்லாட்சி அரசுக்கு ஆதரவு கொடுத்திருந்தனர். அந்தச் சமயத்தில்தான் - 2019 இல் - ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றன.

இந்தத் தாக்குதலினால் நேரடியாக அரசியல் ஆதாயம் அடைந்தது மொட்டுக் கட்சிதான். 2020 ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றி பெறுவதற்கான அரசியல் ஆதாய நிலையை ஏற்படுத்தித் தந்தது ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதல்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதல் ஏற்படுத்திய பதற்றமும், அச்சமும், குழப்பமும் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பெரு வெற்றியைத் தேடி தந்தன என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

அத்தகைய வெற்றியை மொட்டுக் கட்சிக்கு உறுதிப்படுத்துவதற்காகத்தான் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதா என்று சந்தேகிக்கும் - அந்த அடிப்படையில் புலனாய்வை முன்னெடுக்கும் - நிலைமை இன்றும் உள்ளது.

ஆக, இந்தக் குண்டுத் தாக்குதலினால் உடனடி அரசியல் ஆதாயம் பெற்றுக் கொண்ட ராஜபக்ஷக்கள், இப்போது அந்த தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை முடித்துவிட புதிய அரசு முயற்சிக்கும்போது அந்த தாக்குதலின் பெறுபேறில் அரசியல் ஆதாயம் தேட புதிய அரசு முனைவராக ராஜபக்ஷக்களின் சந்ததியில் இப்போது முன்னணியில் நிற்கும் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்துவது விநோதமானதாகும்.

# சலுகை விலையில் உணவுப் பொதிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

அஸ்வெசும பயனாளிகளாகப் பதிவு செய்து தற்போது காத்திருப்போர் பட்டியலிலுள்ள குடும்பங்களுக்கு சலுகை விலையில் உணவுப் பொதிகளை வழங்கும் வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பமானது.

சித்திரை வருடப் பிறப்பின் போது மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்தத் திட்டம் நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும்

5,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதியை 50 வீத விலைக்கழிவுடன் 2,500 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

லங்கா சதொச ஊடாக பெற்றுக்கொள்ள முடியாத பகுதிகளிலுள்ள பயனாளிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக இந்த சலுகைப் பொதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பயனாளிகளாகப் பதிவுசெய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலிலுள்ள 80,12,753 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நிதியமைச்சு மற்றும் உணவுப் பாதுகாப்பு குழு மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.




# பொருத்தமற்ற தேங்காய் எண்ணெய் விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை



பண்டிகை காலத்தில் தொடர்ந்தும் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவிக்கின்றது.

நாடளாவிய ரீதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பரிசோதிக்கப்படும் எனவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

நுகர்வுக்கு பொருத்தமற்ற தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை கண்டறியும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

நுகர்வுக்குப் பொருத்தமற்ற தேங்காய் எண்ணெய் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.





# நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் பங்கு கொண்டு பிள்ளயாரின் அருள் வேண்டிப் பிரார்த்தித்தனர்.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திரு விழாவில் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை கைலாசவாகன திருவிழாவும், 13ஆம் திகதி சப்பை ரதத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் 14ஆம் திகதி திங்கட்கிழமை சித்திரை வருடப் பிறப்பு தினத்தன்று தேர்த்திருவிழாவும், மறுநாள் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற வுள்ளன.













# தமிழரசு வேட்பாளரின் வீட்டின் மீது மண்ணெண்ணைக் குண்டுத் தாக்குதல்

## வெல்லாவெளி திக்கோடையில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை பகுதியில் உள்ள இலங்கைத் தமிழ ரசுக்கட்சியின் உள்ளூராட்சி சபை வேட்பாளர் அருள்ராஜா பிரேமாகரனின் வீட்டின் மீது நேற்று முன்தினம் (31 ஆம் திகதி) இரவு மண்ணெண்ணைக் குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. இதனால் வீட்டுக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளதாக வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

போரதீவுப்பற்று பிரதேசசபைக்கான தேர்தலில் போட் டியிடும் அருள்ராஜா பிரேமாகரன் சம்பவதினமான திங் கள் இரவு மரண வீடு ஒன்றுக்கு சென்றிருந்த நிலை யில் வீட்டில் அவரது மனைவி, பிள்ளைகள் உறங்கி கொண் டிருந்தனர். அச்சமயம் இனம் தெரியாதோரால் வீட்டின் மீது மண்ணெண்ணைக் குண்டுதாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின் றது. வீட்டின் கூரைமீது அது வீழ்ந்து, வீட்டின் உட்பகுதி யில் பொருத்தப்பட்டிருந்த சீற் சேதமடைந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், பியர் ரின்னில் மண்ணெண்ணையை அடைத்து இந்த குண்டு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாக கண்டறிந்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

# பண்டிகை காலத்தில் பலத்த பாதுகாப்பு

பண்டிகை காலத்தை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

கொழும்பில் பாதுகாப்பு கடமைகளில் 6,000 அதிகா ரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பொலிஸாரை தவிர இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைக ளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

வீதித்தடை கண்காணிப்புகளுக்காக இராணுவம் கடமையில் ஈடுபடுத்தப்படுவதோடு பொலிஸார் சிவில் உடை மற்றும் துப்பாக்கிகளுடன் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வு உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுப் படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ள னர்.



# மியன்மார் செல்கிறது இலங்கை நிவாரண குழு

மியன்மாரில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக நிவாரண குழுவை இலங்கையிலிருந்து அனுப்ப தயாராகவுள்ளதாக இராணுவம் தெரிவிக்கின் றது.

மியன்மாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமை வாக அதனை நிறைவேற்றுவதற்கு தயாராகவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரி வித்துள்ளார்.

மியன்மாருக்கு அனுப்பப்படவுள்ள இராணுவத்தி னரின் எண்ணிக்கை அந்த நாட்டின் கோரிக்கை பிரகாரம் தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே மியன்மாருக்கு வைத்தியக் குழுவை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாக சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் துள்ளார்.





# பருத்தித்துறை நீதிமன்றத்துக்குப் புதிய கட்டடத் தொகுதி

## பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

(வடமராட்சி நிருபர்)

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தை பருத்தித்துறை – மருதங்கேணி வீதியிலுள்ள பல்லப்பை முச்சந்திக்கு அண்மையாக நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வாரம் ஜெ.ரஜீவன் எம். பி. தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தைப் புதிய இடத்தில் நிர்மாணிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நீதிமன்ற வளாகம் அமைப்பதற்காக 4 ஏக்கர் அரச காணி அங்கு இனங்காணப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நீதிமன்ற வளாகத்தை அமைக்க 20 கோடி ரூபாவை முதல் கட்டமாக நீதி அமைச்சு கடந்த வருடம் ஒதுக்கியமையும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேபோன்று, அல்வாய் நாவலடி சந்தி – திக்கம் கிராம வீதியில் வீதியின் நடுவே அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றுமாறு பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இராணுவ அதிகாரி, "படை முகாம்கள் அமைந்துள்ள காணிகளை விடுவிப்பதற்கு என இராணுவப் பிரிவில் ஒரு சபை இருக்கின்றது. இந்தக் கோரிக்கையை அந்தச் சபைக்குத் தெரிவிக்கின்றேன்." – என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து, கூட்டத்தில் பங்கேற்ற ரஜீவன், அர்ச்சுனா எம். பிக்கள் இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருடன் பேசி தீர்வு காண்பதாகத் தெரிவித்தனர்.

மேலும், திக்கம் வடிசாலைக் காணியை அதற்குப் பொறுப்பான வடமராட்சி பனை தென்னை வள கொத்தணிச் சங்கத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதுவும் கூட்டத்தால் ஏற்கப்பட்டது.







# இருதய நோயாளர்களின் எண்ணிக்கை மிக உயர்வு



நாளுக்கு நாள் நாட்டில் இருதய நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து வருவதாக இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

தினசரி 175 முதல் 200 பேர் வரை இருதய நோயாளர்களாக அடையாளங் காணப்படுகின்றனர் என வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே இருதய நோய்க்கு வழிவகுப்பதாக இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.



# நுவரெலியா வசந்த காலக் கொண்டாட்டம் கலை, கலாசார நிகழ்வுகளுடன் ஆரம்பம்!





(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

2025 ஆம் ஆண்டுக்கான நுவரெலியா வசந்த கால நிகழ்வுகள் நேற்றுக் காலை நுவரெலியா – பதுளை பிரதான வீதியில் நுவரெலியா மத்திய சந்தைக்கு முன்பாக உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுகள் இம்மாதம் 30ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளன.

நுவரெலியா மாநகரசபை ஆணையாளர் எச்.எம்.பண்டார தலைமையில் வசந்த கால ஏற்பாட்டுக் குழுவின் கலை, கலாசார நடன நிகழ்வுகளுடன் ஆரம்பமான இந்த வசந்தக்கால நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண பிரதான செயலாளர் ஜி. எச். எம். அஜீத் பிரேமசிங்க மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர், நுவரெலியா பிரதேச சபை செயலாளர் , இராணுவ அதிகாரி, பொலிஸ் அதிகாரி, கடற்படை அதிகாரி, விமானப்படை அதிகாரி பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்.

வழக்கம் போல் நுவரெலியா நகரில் உள்ள பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை நிகழ்ச்சியுடனும் பொது அமைப்புகளின் அணிவகுப்பு மரியாதையுடனும் ஊர்திகளின் ஊர்வலத்துடனும் வசந்த கால நிகழ்வுகள் கோலாகாலமாக ஆரம்பமாகின. இந்த ஆரம்ப வைபவத்தில் நுவரெலியா லயன்ஸ் கழகத்தின் அங்கத்தினரின் அணிவகுப்பும், நுவரெலியா சுற்றுலாத் துறையினரின் வாகன அணிவகுப்பும், நுவரெலியா பொலிஸாரின் குதிரை அணிவகுப்பும் இடம்பெற்றமை குறிப்பிடதக்கது

வருடந்தோறும் நடைபெறும் வசந்த கால கொண்டாடத்தில் தொடர்ந்து வரும் நாள்களில் மலர் கண்காட்சி, படகோட்டம், கார் பந்தய ஓட்டப் போட்டி, குதிரைப்பந்தயம், கிரிக்கெட் சுற்றுப் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி, கிறகரி வாவியில் நீர் விளையாட்டு, சேற்றில் மோட்டார் ஓட்டம், மோட்டார் சைக்கிள் தடைதாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் இசை நிகழ்ச்சிகள் எனக் களியாட்ட விழாக்களும் இந்த வசந்த கால விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வசந்த காலத்தை ஒட்டி நுவரெலியாவிற்கு வருகைதர விருக்கும் சுற்றுலா பயணிகளின் நன்மைகருதி அத்தியாவசிய தேவைகளை நுவரெலியா மாநகரசபையும் , பயணிகளை பாதுகாப்பதற்கான விசேட சேவையை நுவரெலியா பொலிஸாரும் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, வெளிமாவட்டங்களிலிருந்து நுவரெலியாவிற்கு விசேட போக்குவரத்து பஸ் சேவை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.






# தையிட்டி சட்ட விரோத விகாரையால் பாதிக்கப்பட்ட மக்களை பேச அழைப்பது தமிழர்களை மீண்டும் ஏமாற்றுவதற்காகத்தான்!

## அருட்தந்தை மா.சத்திவேல் காட்டமாக அறிக்கை



**(பா.சதீசன்)**

தையிட்டியில் சட்ட விரோத விகாரையால் பாதிக்கப்பட்ட மக்களை கலந்துரையாட அழைப்பது தமிழர்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றுவதற்கே என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தையிட்டியில் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட விகாரை காரணமாக பாதிக்கப்பட்டவர்களோடு நீதி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் யாழ் நாக விகாரையில் அந்த விகாரையின் தலைமைப் பிக்கு மற்றும் சமய தலைவர்கள், நீதி அமைச்சர் ஆகியோரின் பங்கேற்போடு கலந்துரையாடல் ஒன்று இம்மாதம் 3 ஆம் திகதி (நாளை) வியாழக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இது சமய பிரச்சினையாக உருவேற்றப்பட்டு வருகின்றது. உண்மையில் இது தமிழர்களின் தேசிய அரசியல் சார்ந்த பிரச்சினை. சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட விகாரை மற்றும் மட ஆலயத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடமும் தமிழர்களிடமும் அரசும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் மன்னிப்பு கோருவதோடு தமிழர்கள் எதிர்பார்க்கும் நீதி உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும். அதுவே சமய மற்றும் இன நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கும்.

படையினர் தமது இராணுவ வரையறைகளுக்கு அப்பால் சென்று நாட்டின் சட்டத்தையும் மீறி அரச வளங்களையும், தனியார் வளங்களையும் உபயோகித்து இன மற்றும் சமய முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் ஆக்கிரமிப்பு மனப்பான்மையோடு தையிட்டியில் விகாரை எழுப்பியுள்ளமையோடு, அதனை மேலும் பலப்படுத்த மடாலயத்தையும் கட்டியுள்ளனர். கட்டட மற்றும் நாட்டின் சட்ட நெறிமுறை தவறிய குற்றவாளிகள், இதற்கு அனுமதி அளித்த அரசியல் தலைமைகள், துணை நின்ற பேரினவாத சக்திகளை நீதியின் முன் நிறுத்த திராணியற்ற அரசும் நீதி அமைச்சரும் சமய நல்லிணக்கம் எனும் போர்வையில் பாதிக்கப்பட்ட மக்களை கலந்துரையாட அழைப்பது தமிழர்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றுவதற்கே.

அதுவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கையில், அதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கையில், மக்களின் ஆதரவை திரட்டுவதற்காக மறைமுகமாக எடுக்கப்படும் முயற்சியாகவே இக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனலாம். அத்தோடு இதயச் சுத்தியோடு பிரச்சினைக்கான தீர்வை நோக்கி ஆட்சியாளர்கள் பயணிக்க விரும்புகிறார்கள் இல்லை என்பதையுமே இது வெளிபடுத்துகின்றது. இது சாதாரண மக்களை அழைத்து அரசியல் பம்மாத்து காட்டும் வெளி வேடமே.

கடந்து வருடம் நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் தமிழர்களின் பூமிக்கு வந்து "அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம்" என்றவர் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார மேடையிலும் அதே கருத்தினை வெளிப்படுத்தினார். அரசமைத்த பின்னர் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறியவர்கள் இப்போது அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய முடியாது அதற்கு பல சட்ட வழிமுறைகள் இருக்கின்றன என்று கூறுவது ஏன்? தேர்தலுக்கு முன்பாக கூறியதும் தேர்தலுக்கு பின்பாகக் கூறியதும் ஆட்சி பீடத்திலிருந்து கூறுவதும் நேரெதிர் கருத்துக்களாகவே உள்ளன. அதைப் போன்று தான் தையிட்டி விவகாரத்திலும் நீதி நிலை நாட்டப்படும் என்றவர்கள் தற்போது எத்தகைய நீதி என கூறமுடியாமல் பாதிக்கப்பட்ட மக்கள் அழைத்து கலந்துரையாடல் நடத்த நினைப்பது மக்களை திசைதிருப்பி முட்டாள்கள் ஆக்கும் சிந்தனையில் அடிப்படையிலிருந்தே.

திஸ்ஸ விகாரை கட்டப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பிற்கு வந்து பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி அவர்களை சந்தித்து கலந்துரையாடல் நடத்தியும் பின்னர் நம்பிக்கையோடு ஊர் திரும்பி மகிழ்ந்திருக்கையில் அம் மகிழ்வில் மண் அள்ளி தூவியதன் அடையாளமாக குறித்த விகாரைக்கு அண்மையில் சட்ட விரோதமாக மடாலயம் கட்டப்பட்டு அரச ஆசீர்வாதத்தோடு மங்கலகரமாக திறந்து வைக்கப்பட்டது. இது தொடர்பாக பௌத்த சாசன அமைச்சரோ, நீதி அமைச்சரோ தேசிய மக்கள் சக்தியில் இன மற்றும் சமய நல்லிணக்கம் சார்ந்து கருத்து தெரிவிப்பவர்கள் எதுவித கருத்தையும் முன்வைக்காத நிலையில் பாதிக்கப்பட்டவர்களோடு கலந்துரையாடல் நடப்பதற்கு அவசரப்படுவதேன்? எல்லாம் கட்சி அரசியலும் தேர்தல் அரசியலுமே.

சட்டவிரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் தமிழர்களின் அரசியல் மையப் பிரச்சினையாகும். அத்தோடு கட்டமைக்கப்பட்ட பேரினவாத அரச பயங்கரவாத பிரச்சினையுமாகும். இதற்கு அரசியல் நீதியிலான நீதியான தீர்விற்கு முன்வர துணிவில்லாது நிலமிழந்த மக்களின் குறுகிய பிரச்டினையாக மட்டுப்படுத்தி அவர்களோடு மட்டும் கலந்துரையாடுவதும் ஏனைய சமய தலைவர்களையும் அழைத்து ஆசி பெறுவதும் பிரச்சினையை மூடி வளர்ப்பதற்கான திட்டமே. அத்தோடு இதன் மூலம் தாம் விரும்பிய தீர்வினை முன்வைக்கவும் ஆட்சியாளர்கள் விரும்பலாம். ஆனால் இதனை தமிழர்கள் ஏற்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டின் முக்கிய பிரச்சினை எதனையும்

தொடர்ச்சி▼

# தையிட்டி சட்ட விரோத விகாரையால் பாதிக்கப்பட்ட மக்களை பேச அழைப்பது தமிழர்களை மீண்டும் ஏமாற்றுவதற்காகத்தான்!

தொடர்ச்சி▲

தீர்க்க முன்வரவில்லை. அவ்வாறே தமிழர்கள் முகம் கொடுக்கும் அடிப்படை பிரச்சனைகளுக்கான தீர்வை முன் வைக்கவும் ஆயத்தம் இல்லை. எனினும் வடக்கு, கிழக்கில் தமது அரசியலை பலப்படுத்துவதற்கு பல்வேறு புத்திகளை கையாளும் தந்திரமாக–வே தையிட்டி தொடர்பில் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய அரசியல் சதிவலையில் தமிழர்கள் சிக்க மாட்டார்கள்.

இவர்களின் அரசியலைப் பலப்படுத்த இவர்களின் அரசியலில் விட்டில் பூச்சிகளானோர் தமிழர்களை சிக்க வைக்க முயல்வர். அத்தகையவர்கள் தமிழின துரோகிகள், இன அழிப்பாளர்கள் என்றே அடையாளப்படுத்தப்படுவார்கள்.

தையிட்டி சார்பாகவும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாகவும் நீதியான, நேர்மையான தீர்வு எதுவும் இன்றி மீண்டும் மீண்டும் தமிழர்களை ஏமாற்றி அரசியல் செய்ய நினைப்பவர்களை ஜனநாயக ரீதியில் அடிமட்டத்தில் அகற்றுவதற்கான சந்தர்ப்பமாக உள்ளூராட்சித் தேர்தலை அனுகுவோம். ஏமாற்றுத் தேர்தல் அரசியல் வாதிகளுக்கு தமிழர்கள் தக்க பாடம் புகட்டவும் வேண்டும். அது மட்டுமல்லாது தையிட்டி தொடர்பில் நீதியான தீர்வு கிடைக்கும் வரையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மக்கள் திரட்சியோடு போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். அதுவே எமது அரசியலுக்கு வலு சேர்க்கும். – என்று உள்ளது.



# புங்குடுதீவு ஒன்பதாம் வட்டாரத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் எரிப்பு!

**(த.சுபேசன்)**

புங்குடுதீவு ஒன்பதாம் வட்டாரம் வல்லன் நாவில் குளத்தை அண்டிய பற்றைக்காடுகள் நிறைந்த பகுதியில் சூட்சுமமான முறையில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கிராம சேவகர் மற்றும் தீவகம் சிவில் சமூகம் அமைப்பின் உறுப்பினர்களின் தீவிர முயற்சியின் காரணமாக முற்றுகையிடப்பட்டு முற்றாக தீமூட்டி எரித்து அழிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதகாலமாக புங்குடுதீவு பிரதேசத்தில் வாழ்கின்ற சில நபர்களின் ஆதரவோடு கிளிநொ–ச்சி பிரதேசத்திலிருந்து வருகை தந்துள்ள சமூக விரோதிகளினால் கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு விநியோகிக்கப்படுவதாகவும் –

அதன் காரணமாக கிராமத்தில் சமூக சீர்கேடுகள், வன்முறைகள் அதிகரித்துள்ளன எனவும் –

பொதுமக்கள் முறையிட்ட நிலையில் மேற்படி முன்மாதிரிச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர், தீவகம் சிவில் சமூகம் அமைப்பின் உறுப்பினர்கள், புங்குடுதீவு கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் மேற்படி சட்டவிரோத உயிர்கொல்லி சாராயம் தயாரிக்கப்படுகின்ற பகுதியை சுற்றிவளைத்து அன்றைய தினம் இரவு முழுவதும் கசிப்பு தயாரிக்கும் நபர்களை கைது செய்யும் நோக்கில் அங்கு அவர்கள் மறைந்திருந்த போதிலும் அங்கு அக்குற்றவாளிகள் வருகை தராமையினால் கசிப்பு உற்பத்தி நிலையம் தீயிட்டு கொளுத்தி முற்றாக அழிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.





# தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிப்பதற்குப் பிரேரணை

## நாடாளுமன்றில் ஒத்திவைப்பு வேளையில் சமர்ப்பிக்க முடிவு




(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிப்பதற்கான ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதென தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், நாடாளுமன்றில் ஒத்திவைப்பு பிரேரணை சமர்ப்பித்து பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிக்க நடவடிக்கை எடுப்பார் என்ச் உறுதியளித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

தென்மராட்சிப் பிரதேசம் 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பாரிய பிரதேசமாகக் காணப்படுவதனால் அரச உத்தியோகத்தர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

சகல பிரதேசங்களுக்குமான நிதி ஒதுக்கீடு சமனானதாக காணப்படும் பட்சத்தில் தென்மராட்சி பாதிக்கப்படுகின்றது.

எமது அரசாங்கம் இந்தப் பிரச்சினையை தீர்க்கும் என நம்புகின்றேன்.

ஆனாலும் நாடு தற்போது தான் வங்குரோத்து நிலைமையில் இருந்து மீண்டு வருகின்றது.

அரசாங்கத்தால் இதற்கென பெருமளவு நிதியை செலவிடுவதென்பது சவாலான விடயம். வெளிநாட்டு உறவுகளின் பங்களிப்பும் இதற்கு அவசியம். மக்களின் விருப்பம் பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிக்க வேண்டும் என்பதாக காணப்படுவதனால் நிச்சயமாக நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம். – என்றார்.

இது தொடர்பாக கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில் –

தென்மராட்சியில் அதிக தேவைப்பாடுகள் காணப்படுகின்ற போதிலும் பரந்துபட்ட பிரதேசமாக அது காணப்படுவதனால் பிரதேசத்திற்கான ஒதுக்கீடுகள் போதாமல் இருக்கின்றன. கடந்த காலங்களில் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களாக காணப்பட்ட அங்கஜன், சுமந்திரன் மற்றும் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தென்மராட்சியை இரண்டாக பிரிப்பதாக வாக்குறுதியளித்த போதிலும் அதனை நிறைவேற்றத் தவறிவிட்டனர்.

11கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட காரைநகர் ஒரு பிரதேச செயலகமாக காணப்படும் போது ஏன் 60கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சியை இரண்டு பிரதேச செயலகங்களாக பிரிக்க முடியாது எனக் கேள்வி எழுப்பியிருந்தனர்.

தென்மராட்சியை இரண்டாகப் பிரிப்பதற்கான ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை நாடாளுமன்றில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் தான் சமர்ப்பிப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# தென்மராட்சிப் பகுதியில் மக்களின் தொகையை விரைவில் விஞ்சுமாம் குரங்குகளின் எண்ணிக்கை

(த.சுபேசன்)

அறுபது கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தில் 42ஆயிரம் குரங்குகள் காணப்படுகின்றன என அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் கண்டறியப்பட்டிருப்பதாக தென்மராட்சிப் பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தகவல் வெளியிட்டுள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச மட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் போது பொதுமக்கள் குரங்குப் பிரச்ச்ஜ்னை தொடர்பாக தெரிவித்த நிலையிலேயே பிரதேச செயலர் தென்மராட்சியில் 42ஆயிரம் குரங்குகள் காணப்படுகின்றன என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில் –

குரங்குகளைக் கட்டுப்படுத்த வாயுத் துப்பாக்கி வழங்க அனுமதிக்கப்படுகின்றது.

அதற்காக ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.வாயுத் துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்து விவசாய அமைப்புக்களிடம் வழங்குவோம்.– எனத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கருத்துத் தெரிவிக்கையில் –

பன்றி மற்றும் குரங்குகளால் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகம் குரங்குகளை கட்டுப்படுத்துவதற்கான வாயுத் துப்பாக்கிக் கொள்வனவிற்கு ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்த நிதி போதாது. – என்றார்.

குரங்குப் பிரச்சினை தொடர்பில் கூட்டத்திற்கு தலைமை வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் கருத்துத் தெரிவிக்கையில் –

தென்மராட்சி – உசன் கிராமத்தில் புலம்பெயர் உறவுகளுடைய ஒத்துழைப்போடு குரங்கைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு அது வெற்றியும் அளித்துள்ளது. அவர்கள் வற்சப் குழு ஒன்றின் ஊடாக கிராமத்தில் குரங்கின் நடமாட்டத்தை தெரியப்படுத்தி அதனை அதனை கட்டுப்படுத்த பணிக்கமர்தப்பட்டுள்ள ஆள்கள் மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

எனவே இந்த நடைமுறையை ஏனைய கிராமங்களிலும் செயற்படுத்த நடவடிக்கை எடுப்போம். – என்றார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் 2025ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பின் பிரகாரம் 24ஆயிரத்து 610குடும்பங்களைச் சேர்ந்த 73ஆயிரத்து 332அங்கத்தவர்கள் காணப்படுன்ற நிலையில் குரங்குகளின் எண்ணிக்கையும் அதற்கு ஈடுகட்டும் விதத்தில் 42ஆயிரமாக காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் இரண்டு வருடங்களில் தென்மராட்சியின் சனத்தொகையை குரங்குளின் எண்ணிக்கை விஞ்சிவிடும் அபாயம் காணப்படுகின்றது.

விவசாய பூமியான தென்மராட்சியில் 53விவசாய சங்கங்கள் காணப்படுகின்ற போதிலும் குரங்குத் தொல்லை காரணமாக விவசாயிகள் உழைப்பிற்கேற்ற வருமானத்தைப் பெற முடியாமல் திண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வேட்பு மனுவில் அடையாள அட்டை இலக்கம் இல்லை ஆனால் அவரையும் சேர்த்து வேட்பாளராக அங்கீகாரம்

## வவுனியா தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தின் நடவடிக்கை குறித்து விமர்சனம்

(வவுனியா நிருபர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்த வேட்பாளர் விண்ணப்ப படிவத்தில் ஒருவருடைய அடையாள அட்டை இலக்கம் இல்லாத போதும், எவரையும் நிராகரிக்காது வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல மாவட்டங்களில் பல்வேறு காரணங்கள் கூறி பல வேட்பு மனுக்கள் நிரகரிக்கப்பட்டிந்தன. அதில பல வேட்பு மனுக்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செயயப்பட்டும் உள்ளது.

இந்நிலையில், வவுனியா மாநகர சபையில் போட்டியிடும் சுயேச்சை குழு வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்த போது அதில் நேரடி வேட்பாளராக 10 ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரது விவரங்கள் பதியப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தில் அந்த வேட்பாளரது தேசிய அடையாள அட்டை இலக்கம் பதிவு செய்யப்படவில்லை..

அந்த வேட்புமனுவை மேற்பார்வை செய்த வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகர்களும், அதனை சரி என ஏற்றுக கொண்டுள்ளார்கள். ஆனால் வேறு சில இடங்களில் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் மற்றும் நபர்கள் நிராகரிக்கப்பட்ட போதுடம் வவுனியாவில் அந்த நடைமுறை பின்பற்றப் படவில்லை.

உள்ளூராட்சி சட்ட விதிமுறை பொதுவானதாக காணப்பட்ட போதும் வவுனியாவில் ஏன் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது வவுனியா மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம் உயர் நீதிமன்ற உத்தரவை அடுத்து ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# முல்லைத்தீவு மாவட்டத்தில் 250 குடும்பங்கள் கசிப்பு உற்பத்தியை மேற்கொள்கின்றனவாம்!

**(ந.லோகதயாளன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 250ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கசிப்பு உற்பத்தியை தொழிலாக மேற்கொள்கின்றன என மாவட்ட அரச அதிபர் உமாமகேஸ்வரன் கவலை தெரிவித்தார்.

மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி, போதைப் பொருள் பாவனை ஆகியவை தொடர்பில் நாம் நீண்ட முயற்சியால் தகவல்களைத் திரட்டினோம். இதில் மாவட்டத்தின் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 5 பிரதேச செயலாளர்கள் மட்டுமே சமர்ப்பித்த விவரங்களை தொகுத்து தற்போது எண்ணிக்கைகளை பொலிஸாரிடம் சமர்ப்பித்துள்ளோம்.

வெலிஓயா பிரதேச செயலாளர் இந்த விவரத்தை சம்ப்பிக்கவில்லை. சமர்ப்பிக்கவில்லை என்பதனால் அங்கே இந்தப் பிரச்சினை இல்லை என்பது அர்த்தப்பட மாட்டாது. அவர்கள் அச்சம் காரணமாகவே அந்த விவரத்தை சமர்ப்பிக்க மறுக்கின்றனர். அதாவது வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவிற்கான விவரத்தை நாம் 2024ஆம் ஆண்டு இறுதியிலேயே தயாரித்து விட்டோம். அதனால் அவர்களது பெயர் விவரத்துடன் பொலிஸாரிடம்

4.சட்ட விரோத மது, போதைப்பொருள் உற்பத்தி, விற்பனை, பாவனை

| Sector | Details | Responsibility |
|---|---|---|
| சுகாதாரம் | இதுவரை சட்ட விரோத மது விற்பனை தொடர்பில் 239 நபர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் பொலீஸ் திணைக்களம் இவர்களிற்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுத்தல் வேண்டும் | 1. பொலீஸ் திணைக்களம் |

| S.NO | Divisional Secretariat | Numbers |
|---|---|---|
| 1 | Maritimepattu | 87 |
| 2 | Puthukkudiyiruppu | 28 |
| 3 | Oddusuddan | 50 |
| 4 | Thunukkai | 34 |
| 5 | Manthai East | 40 |
| 6 | Welioya | |
| | Total | 239 |

ஒப்படைத்தோம். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பட்டியலில் எவரது பெயர் காணப்பட்டதோ அந்தச் சந்தேக நபர் கிராம சேவகரைத் தேடிச் சென்று நான் கசிப்பு உற்பத்தி செய்வதாக பொலிசாருக்கு அறிக்கை அனுப்பியுள்ளீர்கள் எனக் கேட்டு அச்சுறுத்தியுள்ளார். இதனால் எஞ்சிய கிராம சேவகர்கள் அச்சம் காரணமாக விவரத்தை வழங்க மறுக்கின்றனர் என பிரதேச செயலாளர் கூறுவதன் மூலம் பொலிஸார் மீது நம்பகத் தன்மை இழக்கப்படுகின்றது.

இதேநேரம் எஞ்சிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 239 குடும்பங்கள் இனம் காணப்பட்டுள்ளன.

இவற்றில் பல இடங்களில் பகல் வேளைகளில் செல்லும்போதே பகிரங்கமாக காய்ச்சுகின்றனர் அல்லது பகிரங்கமாக எடுத்துச் செல்கின்றனர். அதற்கான வீடியோ ஆதாரங்களும் கை வசம் உள்ளன. இவை பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவற்றிற்கான சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொலிஸாரிடமே காணப்படுகின்றது. – என்றார்.





# பிரதமர் மோடி வருகையால் 3 நாள்கள் மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை

பிரதமர் நரேந்திர மோடி பாம்பன் புதிய ரயில் பாலம் திறப்பு விழாவுக்கு வருகைதருவதைமுன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் ஏப்ரல் 4, 5, 6 ஆகிய மூன்று நாள்கள் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாம்பன் புதிய ரயில் பாலத்தை திறந்து வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 6 ஆம் திகதி இராமேஸ்வரம் வருகை தர உள்ளார். இதனால் பாதுகாப்பு காரணங்களுக்காக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் கடலுக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாம்பன் மன்னார் வளைகுடா மற்றும் பாம்பன் பாக் ஜலசந்தி கடற்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளை பாம்பன் குந்துக்கால் மீன்பிடி இறங்குதளத்தில் நிறுத்துமாறும் மீன்வளத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# இராமேஸ்வரம் வரும் பிரதமர் மோடிக்கு எதிராக கறுப்புக் கொடி போராட்டம்; மீனவர்கள் அறிவிப்பு

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மற்றும் புதுச்சேரி மாநில மீனவர்களை விடுதலை செய்ய அந்நாட்டு அரசுக்கு அழுத்தம் கொடுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இராமேஸ்வரம் வரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு கறுப்புக் கொடி காட்டி போராட்டம் நடத்தப்படும் என அகில இந்திய மீனவர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.



இது குறித்து அகில இந்திய மீனவர் காங்கிரஸ் தேசிய தலைவர் ஆம்ஸ்ட்ராங் பெர்னான்டோ வெளியிடுள்ள அறிக்கையில்,

“கடந்த 2014-ம் ஆண்டு முதல் 2025 தற்போதைய மார்ச் மாதம் வரையிலும் 10 ஆண்டுகளில் 480 படகுகள் கைப்பற்றப்பட்டு 3,800 மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரியில் இருந்து மார்ச் மாதம் வரையிலுமான மூன்று மாதத்தில் மட்டும் 21 படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு 159 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 6 ஆண்டுகளில் 185 படகுகளை இலங்கை நீதிமன்றங்கள் நாட்டுடமையாக்கி உள்ளன. நாட்டுடமையாக்கப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை உடைத்து விறகுகளாகவும், இயந்திரங்களை பழைய இரும்பு கடைகளுக்கும் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்டும் வருகின்றன. கடந்த காலங்களை விட, தற்போது இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்வது அதிகரித்துள்ளதுடன், மீனவர்களுக்கு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுகிறது. இது தமிழக மீனவர்கள் மத்தியில் அச்சத்தையும் பதட்டத்தையும் உருவாக்கி உள்ளது.

ஆனால், கடந்த 11 ஆண்டு கால பிரதமர் நரேந்திர மோடியின் பா.ஜ.க. ஆட்சியில் கடந்த மூன்று நாடாளுமன்ற தேர்தல்களில் அளிக்கப்பட்ட மீனவர் நலனுக்கன தனி அமைச்சகம், மீன்பிடித் தொழிலை, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றி, இந்திய நாட்டில் வாழும் பாரம்பரிய மீனவச் சமுதாயத்தை பழங்குடியினராக அங்கீகத்தல், புயல், பெருமழை, சூறாவளி, சுனாமி போன்ற இயற்கை பேரிடர்களின்போது விவசாயிகளின் வங்கி கடன்களை மத்திய மாநில அரசுகள் தள்ளுபடி செய்யும்போது மீனவர்களின் தொழில் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

ஏப்ரல் 4 அன்று இலங்கை செல்லும் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மற்றும் புதுச்சேரி மாநில மீனவர்களை விடுதலை செய்யவும், கைப்பற்றப்பட்ட மீனவர்கள் படகுகளை நிபந்தனையின்றி விடுவிக்கவும், இரு நாட்டு மீனவ பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தையை நடத்திடவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்திட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை பிரதமர் மோடியும், மத்திய அரசும் நிறைவேற்றி தராதபட்சத்தில், புதிய பாம்பன் பாலத்தை திறப்பதற்காக ராமேஸ்வரத்துக்கு ஏப்ரல் 6 ஆம் திகதி வருகை தரும், பிரதமர் நரேந்திர மோடியை கண்டித்து அகில இந்திய மீனவர் காங்கிரஸ் சார்பாக, மீனவர்களை திரட்டி கறுப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அகில இந்திய மீனவர் காங்கிரஸ், தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் நிர்வாகிகள், தமிழக காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள், மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளார்கள்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# குஜராத் பட்டாசு தொழிற்சாலையில் வெடி விபத்து; 13 பேர் உயிரிழப்பு

குஜராத் மாநிலம், பனஸ்கந்தா மாவட்டத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று காலை ஏற்பட்ட இந்த வெடி விபத்தில், பட்டாசு தொழிற்சாலை முழுவதும் தீ பரவியதுடன், அந்த தொழிற்சாலையின் மேற்கூரையும் இடிந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெடி விபத்தில் 13 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். 4 பேர் படுகாயமடைந்தனர்.

பொலிஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் இணைந்து படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் என இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

மேலும், இந்த விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை அந்த நாட்டு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.







# இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் நால்வர் உயிரிழப்பு; 7 பேர் காயம்



பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் இஸ்ரேலுக்கும் லெபனான் ஆயுதக் குழுவான ஹெஸ்பொல்லாவிற்கும் இடையிலான பலவீனமான போர்நிறுத்தத்திற்கு மேலும் அழுத்தம் கொடுப்பதாக லெபனான் தரப்பு தெரிவிக்கிறது.

கடந்த நவம்பரில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த போதிலும், அண்மைய நாள்களில் ஹெஸ்பொல்லாவின் முக்கிய தளங்களில் ஒன்றான டாஹியே பகுதியில் இரண்டாவது முறையாகவும் இஸ்ரேல் இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

இதனிடையே, இஸ்ரேலிய பொது மக்களுக்கு எதிராக ஹமாஸ் தாக்குதல் நடத்துவதற்கான திட்டத்தை வகுக்க உதவிய ஹெஸ்பொல்லா அமைப்பைச் சேர்ந்த ஒருவரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் இதுதொடர்பில் ஹெஸ்பொல்லா எந்தவித உடனடி பதிலையும் வழங்கவில்லை.

எவ்வாறாயினும் லெபனான் ஜனாதிபதி ஜோசப் அவுன் இந்த தாக்குதலைக் கண்டித்துள்ளார்.

# வீடும் பணமும் கொடுத்து வாழ வைக்கும் இத்தாலி அரசு

இத்தாலியின் ட்ரெண்டினோ நகரத்தில் உள்ள கிராமங்களில் குடியேறுபவர்களுக்கு வீடு மற்றும் பணம் வழங்க இத்தாலி அரசு தீர்மானித்துள்ளது .

இந்த நகரத்தின் 33 கிராமங்களில் குடியேறுபவர்களுக்கு சொந்தமாக வீடு மற்றும் இந்திய மதிப்பில் 92 லட்சம் ரூபா பணத்தை வழங்க முடிவு செய்துள்ளது.

வெளிநாட்டவரும் இந்த வாய்ப்பை பெறலாம் என இத்தாலி அரசு தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் இந்த வீட்டில் 10 ஆண்டுகள் வாழ வேண்டும் எனவும் இல்லையெனில் கொடுத்த பணத்தை திரும்ப அரசுக்கே வழங்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

மக்கள் கிராமத்தை விட்டு வெளியேறி நகர் புறங்களில் தற்போது குடியேறி வருவதால் இம்முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டார் இம்ரான் கான்



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக மேற்கண்ட பரிந்துரை வந்துள்ளது.

தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், அமைதிக்கான நோபல் பரிசுக்கு இரண்டாவது முறையாக பரிந்துரைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் இதுவாகும்.

கடந்த டிசம்பரில் நிறுவப்பட்ட ஒரு குழுவான பாகிஸ்தான் உலக கூட்டணியின் உறுப்பினர்கள், நாட்டில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்திற்கான கானின் பணிக்காக அவரை பரிந்துரைப்பதாக அறிவித்தனர்.

2019ஆம் ஆண்டில், இந்தியாவுடனான பதட்டங்களைத் தணிக்க இம்ரான் கான் மேற்கொண்ட முயற்சிகளுக்காக இந்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டார்.

மேலும், அவரது ஒப்புதல் தொடர்பான தீர்மானம் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2019 பெப்ரவரியில் பாலகோட் வான்வழித் தாக்குதலின் போது பாகிஸ்தான் எல்லைக்குள் அண்டை நாட்டு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டபோது சிறைபிடிக்கப்பட்ட இந்திய விமானப் படை விமானி விங் கமாண்டர் அபிநந்தன் வர்தமனை விடுவிக்க கான் எடுத்த முடிவு, பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பகைமையைத் தணித்ததாக அந்தத் தீர்மானம் கூறியது.

பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் (PTI) கட்சியின் நிறுவனர் மற்றும் முன்னாள் தலைவரான இவர், பல வழக்குகளில் தண்டனை பெற்றதற்காக தற்போது பல சிறைத்தண்டனைகளை அனுபவித்து வருகிறார்.

இம்ரான் கான் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

2024 பெப்ரவரியில் பொதுத் தேர்தலுக்குப் பிறகுீவுஜ மத்திய அரசாங்கத்துடன் முரண்பட்டு வருகிறது. மேலும் நாட்டில் பலமுறை போராட்டங்கள் வெடித்துள்ளன.

இந்த ஆண்டு ஜனவரியில், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் தொடர்பான வழக்கில் கானுக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இம்ரான் கான் சிக்கிய பல வழக்குகளில், அரசு பரிசுகளை விற்பனை செய்தல், அரசு இரகசியங்களை கசிய விடுதல் மற்றும் சட்டவிரோத திருமணம் தொடர்பான மூன்று தண்டனைகள் நீதிமன்றங்களால் இரத்து செய்யப்பட்டன அல்லது இடைநிறுத்தப்பட்டன.

# இன்றைய ராசி பலன்கள் - 02.04.2025




உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைப்பது அரிது. இன்று சௌகரியங்களை இழக்க நேரலாம். அது உங்களுக்கு கவலையைத் தரும். இன்று சராசரியையும் விட சற்று மேலான நாள்.

பணியில் திறம்பட செயலாற்ற ஒழுங்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம். அது நீங்கள் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டியாக அமையும்.

இன்றைய நாள் நல்லுறவிற்கு சாதகமாக காணப்படாது. அலுவலகப் பணிச்சுமை மற்றும் உடல் நலக்கோளாறு காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

இன்று பணம் அதிக அளவில் செலவாகும்.எனவே திட்டமிட்டு பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். அஜீரணக் கோளாறு காணப்படும். அதனால் அசௌகரியம் ஏற்படும்.




இன்று தடைகளும் தாமதங்களும் காணப்படும். முக்கியமான முடிகளை தள்ளிப்போடுவது நல்லது. ஓய்வு நேரத்தில் இசையைக் கேட்டு இன்புறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இல்லை. உங்கள் சக பணியாளர்களுடன் ஒத்துப் போவதன் மூலம் உங்கள் பணிகள் சுமுகமாக நடக்கும்.

காதலில் சுமுகமான உறவு இருக்காது. உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இன்று வீட்டை புதுப்பிப்பதற்கு பணம் செலவாகும். எனவே கட்டுக்கடங்காத செலவினங்கள் காணப்படும்.

கால்வலி மற்றும் முதுகு வலி காணப்படலாம். ஓய்வும் அமைதியும் தேவை.




இன்றைய நாள் சீராக இருக்கும். இன்று அமைதியான மனநிலை காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கியமான முடிவுளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

இன்று பணியில் சுமுகமான நற்பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இது காதலுக்கு உகந்த நாள்.உங்கள் காதல் உணர்வுகளை வெளிப்படையாக காண்பிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி அனுகூலமாக இருக்கும். நீங்கள் புத்திசாலித்தனமாக பணத்தை கையாளுவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்ல தேகநிலை காணப்படும்.




இன்று லாபகரமான நாளாக இருக்கும். புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் இருப்பீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபத்தை அளிக்கும்.

இன்று வேலைவாய்ப்புகள் மிகவும் நன்றாக இருக்கும் மற்றும் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் தொழில் முறையுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை கையாள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உறவின் மதிப்பை உணர்ந்து கொள்வார்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான பணம் காணப்படும்.அதிக சேமிப்பும் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று படபடப்புடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் அனைத்தும் நன்றாக இருக்கும். முக்கியமான முடிவுகள் அல்லது புதிய முயற்சிகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படலாம்.

உங்கள் வீட்டின் புனரமைப்பு அல்லது வளர்ச்சி குறித்து உங்கள் தாயிடம் விவாதிப்பீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

பணவளர்ச்சி சிறப்பாக காணப்படாது. தேவையற்ற செலவினங்களை சந்திக்க நேரிடும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி அல்லது உயர் அழுத்தம் காணப்படலாம்.




இன்றைய நாள் சிறந்த நாளாக அமையாது. சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உங்கள் கவலை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தேவையில்லை. நேர்மறையாக எண்ணுவதன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை மிகவும் தைரியத்துடனும் நேர்மறை எண்ணங்களுடனும் ஆற்றுவீர்கள். அதனால் பணியில் ஏற்படும் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையை சமாதானப்படுத்துவதை கடினமாக உணர்வீர்கள். எனவே அவரை சந்திப்பதை தவிர்ப்பது நல்லது.

பணவரவுக்கான வாய்ப்பு இல்லை.




இன்றையநாள்சீராகஉள்ளது.திருப்தி கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். உங்கள் வேலைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

ஒரு நல்ல முடிவுக்கு வருவதன் மூலம் உங்கள் வாழ்க்கையின் போக்கை நீங்கள் தீர்மானிக்க முடியும். உங்கள் பிரியமானவரை சந்திப்பதன் மூலம்இது சாத்தியம்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முகத்தில் உற்சாகம் நிறைந்து காணப்படும்.

நல்ல ஆற்றலும் மனஅமைதியும் காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




இன்று மிகவும் நல்ல நாள். புதிய நண்பர்கள் மற்றும் அவர்களது ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ள முன்னேற்றத்தை அளிக்கும். வசதிகளும் மகிழ்ச்சியும் கிடைக்கும். தியானம் மேற்கொள்வது மிகவும் சிறந்தது.

இன்று ஓய்வின்றி உழைப்பீர்கள். சவாலான சில பணிகள் உங்கள் திறமைகளை சோதிக்கும். உங்கள் பணியில் நீங்கள் நன்கு வளர்வீர்கள்.

உங்கள் துணையுடனான உறவு சிறந்த முறையில் இருக்கும்.இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவும் செலவும் சேர்ந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.04.2025




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று நீங்கள் மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். அதனை தவிர்க்க வேண்டும். இயல்பாக வும் மகிழ்ச்சியாகவும் இருப்பது உங்களுக்கு மிகவும் நல்லது.

சகபணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். நீங்கள் மேற்கொண்டிருக்கும் உங்கள் பணி சம்பந்த மாக சில பதட்டங்கள் உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையை சந்திப்பதை தவிர்த்தல் நலம். சூடான விவாதங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணஇழப்புக் கான வாய்ப்புகள் உள்ளன.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இரவில் குறைந்த தூக்கம் காணப்படும். அதனால் ஓய்வின்மை காணப்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு துடிப் புடன் இருக்காது. ஆன்மிக காரியங்கள் மற்றும் பிரார்த்தனை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தால் துடிப்புடன் உணரலாம். பொறுமை மற்றும் உறுதி யான அணுகுமுறை தேவை.

பணியைப் பொறுத்தவரை சாதகமாக இல்லை. அதிகரிக்கும் பணிச்சுமை கவலையை அளிக்கும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவு பராமரிக்க இயலாது.

உங்கள் துணையை சந்திப்பதை தவிரத்தல் நலம். உங்களிடம் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவருக்கிடையே மோதல்கள் ஏற்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும்.




இன்று மிகவும் அனுகூலமான நாள் இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை எதிர் பார்க்கலாம். முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். சிறந்த பலனைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரியிடம் நற்பெயர் சம்பாதிப்பீர்கள்.

இன்றைய தினத்தை மகிழ்ச்சிகரமானதாக ஆக்கு வீர்கள். உங்கள் துணையுடன் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் கிடைக்கும். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நீங்கள் ஸ்திரமாகவும் அதிக திடத்துடனும் காணப்படு வீர்கள்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. ஆன்மீக பயணங்கள் மூலம் இன் றைய நாளை நீங்கள் சாதகமான நாளாக மாற்றிக் கொள்ளலாம். அதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். பணியிடத்தில் நீங்கள் அதிக பொறுப்பு களை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் காட்டு வீர்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்புகள் ஏற்படும். பணத்தைக் கை-யாள்வதில் விழிப்புணர்வு அவசியம்.

மனதில் காணப்படும் பதற்றம் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

# இறக்காமம் நெய்னாகாடு சாவாறுப் பகுதியில் காணாமல் போயிருந்த மீனவர் சடலமாக மீட்பு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெய்னாகாடு சாவாற்றில் மீன் பிடிக்கச் சென்றவர் நேற்றுப் பிற்பகல் வேளையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கல்முனை - பாண்டிருப்பைச் சேர்ந்த செல்வராசா என்று உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது :-

அம்பாறை - இறக்காமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெய்னாகாடு சாவாறு பகுதியில் நண்பருடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வேளையில் மீன் பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் தனது கணவரைக் காணவில்லை என மனைவி நேற்று செவ்வாய்க்கிழமை (காலை இறக்கா மம் பொலிஸில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய குறித்த மீனவரின் நண்ப ரிடம் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, காணாமல் போனவர் பிற்பகல் 3.00 மணியள வில் சடலமாக மீட்கப்பட்டார்..

இவ்வாறு மீட்கப்பட்டவர் செல்லராசா வெற்றி வேல் (பெரிய தம்பி) என்ற பெயருடைய செல்லப்பா வீதி, பாண்டிருப்பு 01ஏ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் ஆவார். இதனை உறவினர்கள் உறுதி செய்துள்ளனர்.

மீட்கப்பட்டவரின் சடலம் பிரேத பரிசோதனைக்க-ாக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.